
## திராவிட இயக்க இதழ்கள் - 'யாதும் ஊரே'




தந்தை பெரியார் வழியில், தமிழ்மொழி, தமிழ்ச் சமூகத்துக்காக போராடுவதில், தன்னை அர்ப்பணித்துக் கொண்டு வாழ்ந்தவர் ஐயா நா.வை.சொக்கலிங்கனார்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆலடிப்பட்டி எனும் சிற்றூரில் பிறந்த அவர், சென்னை துறைமுகத்தில் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி 1995-இல் ஓய்வு பெற்றார்.

பெரியார் கொள்கையாளரான அவர், தாம் வாழ்ந்த பம்மல் பகுதியில் 'திருவள்ளுவர் பொதுநல மன்றம்' அமைக்கப் பாடுபட்டவர். 'பம்மல் நாகல்கேணி தமிழ்ச் சங்கம்' என்ற ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலமாக 'யாதும் ஊரே' எனும் இதழைக் கொண்டு வந்தார்.

1997-இல் தொடங்கப்பட்ட அந்த இதழ், மாத இதழாக 2009-ஆம் ஆண்டு வரை வெளிவந்தது.

நல்ல கருத்துகளை உள்ளடக்கி வந்த, 'யாதும் ஊரே' இதழ் ஒவ்வொன்றும் ஓர் ஆளுமை குறித்த சிறப்பிதழாக மலர்ந்தது. அவை அந்த ஆளுமையைப் பற்றிய வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்ந்தது. 2003-இல் பொடா சட்டத்தில் பழ.நெடுமாறன், வைகோ போன்றவர்களைக் கைது செய்த போது இவருக்கும் உளவுத்துறை அச்சுறுத்தல் கொடுத்தது. இதழ் நிறுத்தப்பட வேண்டும், இல்லையேல், தடை செய்யப்படும் என்று அச்சுறுத்தல் வந்தது. இதற்கெல்லாம் அஞ்சாமல், தமிழீழ விடுதலைக்காகத் தொடர்ந்து எழுதி வந்தார்.

2009-இல் தான் இறக்கும் வரை, அந்த இதழை நடத்தி வந்தார்.

## :ப்ளாஷ்பேக்





மில்.ஜே.குமார்

### பொதுக்கூட்டத்துக்குப் பாராட்டு!

2001-ஆம் ஆண்டு, திருநெல்வேலி மாவட்டத்திற்கு சட்டமன்றத் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்துக்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வருகை தந்தார்கள். பொதுக்கூட்ட ஏற்பாடுகளில், முன்னின்று வேலை செய்ததால், தலைவர் கலைஞர் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இன்றைய திருநெல்வேலி கிழக்கு மாவட்டச் செயலாளர் அய்யா இரா.ஆவுடையப்பன் அவர்கள் உடனுள்ளார்.

**- மில்.ஜே.குமார், திருநெல்வேலி மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### தஞ்சைக்கு கைத்தறித் துணிகள்!

1952-ஆம் ஆண்டு, புயல் நிவாரண நிதி திரட்டும் பணி நிறைவு நாள், தஞ்சையில் நடைபெற்ற பின்னர், சென்னையில் நிதியளிப்புக் கூட்டத்தை நடத்தியது கழகம். இறுதியாக, திரட்டப்பட்ட தொகை 27 ஆயிரத்து 645 ரூபாயை, அப்படியே அரசிடம் வழங்காமல், ரூ.27 ஆயிரத்துக்கு கைத்தறித் துணிகளாக வாங்கி சென்னை ஆட்சியரிடம் அளித்து, அவர் திருச்சி ஆட்சியர் மூலம் மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வது என கழகம் முடிவு செய்தது. 'திராவிட நாடு' இதழில் 'களிப்பும், காணிக்கையும்' என தலையங்கம் எழுதி, கலைஞரைப் பாராட்டினார் பேரறிஞர் அண்ணா.

## முதன் முதலில் 19

**ந.வினோத்குமார்**

**திராவிட இயக்க அடையாளங்களை, நடைமுறைகளைப் பற்றி விளக்கும் 'திராவிட மரபு' தொடர் இது...**







# எதிர்த்து நிற்கும் கையெழுத்துகள்!

இன்று நாடு முழுவதும் 'நீட்' டுக்கு எதிராகக் குரல்கள் ஒலிக்கத் தொடங்கி உள்ளன. கிளர்ச்சிகள் வெடிக்கின்றன.

இதற்கெல்லாம் விதை போட்டது, திராவிட முன்னேற்றக் கழகம். அதிலும், இளைஞர் அணி சார்பாக மேற்கொள்ளப்பட்ட கையெழுத்து இயக்கம், கழகம் முன்னெடுத்த போராட்டங்களுக்கு அதிக வலுசேர்த்தது.

கையெழுத்து இயக்கம் நடத்துவதால், என்ன பயன் என்று கேள்வி எழலாம். அரசின் அராஜகப் போக்குக்கு எதிராக இவ்வளவு பேர் எதிராக இருக்கிறார்கள், இவ்வளவு பேர் அதிருப்தி தெரிவிக்கிறார்கள் என்ற அச்சத்தை அரசுக்கு வெளிப்படையாகத் தெரிவிக்கும் அடையாளம்தான் இந்தக் கையெழுத்து இயக்கம்.

இப்படியான அடையாளப் போராட்டத்தை, தமிழக அரசியல் சூழலில் முதன்முதலில் அறிமுகப்படுத்தியது, திராவிட இயக்கம் தான். இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், திராவிட இயக்கத்துக்கு அடிப்படையாக இருந்த தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம்தான்.

பெரியார் தொடங்கிய கையெழுத்து இயக்கம் குறித்து, கவிஞர் கருணானந்தம் பெரியாரின் வாழ்க்கை வரலாற்று நூலில் இவ்வாறு எழுதுகிறார்:

"சுயமரியாதைப் பிரச்சாரத்துக்குச் செல்லும் தோழர்கள்' நான் கடவுளை மறுக்கிறேன். சாதி மதம் பாராட்டமாட்டேன்' என்றெல்லாம் பகுத்தறிவுக் கருத்துகளை ஏற்றுக் கொள்வதாக ஒரு நமுனாவில் கையொப்பமிட்டு, ஆங்காங்கே ஆயிரக்கணக்கில் சேகரிக்க வேண்டும் என்று ஒரு பணியைத் தந்திருந்தார் பெரியார் 23.5.67 அன்று.

'இதுவரை 10 ஆயிரம் கையெழுத்துகள்தான் திரட்டியிருக்கின்றீர்கள்; இந்தப் பணியை இன்னும் மும்முரமாகச் செய்யுங்கள்' என்று முடுக்கிவிட்டார்" என்று எழுதும் அவர், மே 24, 25 தேதிகளில் தஞ்சை மாவட்டம், விடையபுரம் பகுதியில் பெரியார் நடத்திய சுயமரியாதைப் பிரச்சாரப் பயிற்சிவகுப்பு குறித்தும் எழுதுகிறார்.

அப்போது, 'பகுத்தறிவின் முதற் பகை, கடவுள்நம்பிக்கைதான்' என்றார் பெரியார்.

**கூட்டத்தினர் ஒவ்வொன்றையும் எதிர்முழக்கமாக எதிரொலிக்கவும் வேண்டும். அன்று முதல் இன்று வரை இத்திட்டம் வழக்கத்தில் கையாளப்பட்டு வருவது, குறிப்பிடத்தக்கதாகும்.**

தொடர்ந்து, 1967-ஆம் ஆண்டு ஜூன் 7 அன்று வெளியான 'விடுதலை' இதழில், 'பெரியார் அறிக்கை' எனும் தலையங்கத்தில், விடையபுரம் பயிற்சி வகுப்பில்தான் பெரியார் உருவாக்கிய கடவுள் மறுப்பு வாசகங்கள் முதன்முறையாக உலகுக்கு அறிமுகம் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"அதன்படி, ஒவ்வொரு கழக நிகழ்ச்சி தொடக்கத்தின்போதும், அமைப்பாளர் முதலாவதாக முன்வந்து, இவற்றைக் கூற வேண்டும். கூட்டத்தினர் ஒவ்வொன்றையும் எதிர்முழக்கமாக எதிரொலிக்கவும் வேண்டும். அன்று முதல் இன்று வரை இத்திட்டம் வழக்கத்தில் கையாளப்பட்டு வருவது, குறிப்பிடத்தக்கதாகும். பெரியார் அறிவித்தது:

கடவுள் இல்லை.
கடவுள் இல்லை.
கடவுள் இல்லவே இல்லை.
கடவுளைக் கற்பித்தவன் முட்டாள்.
கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்.
கடவுளை வணங்குகிறவன் காட்டுமிராண்டி."

என்று கருணாந்தம் அவர்கள் திராவிட இயக்க மரபு ஒன்றின் வரலாற்றை எடுத்துக்காட்டுகிறார்.

...அடையாளம் அறிவோம்.

## பாசறை படிப்புறை

**கௌதம் ராஜ்** 19


**"புத்தகத்தில் உலகைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாய்ப் படிப்போம்" என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# பேசப்படாத நாயகர்களின் நினைவுகள்!

இந்தியாவின் வெகுமக்கள் இயக்கங்கள் என்று எடுத்துக்கொண்டால், 'தேசிய இயக்கம்', 'கம்யூனிச இயக்கம்','தலித் இயக்கம்', 'திராவிட இயக்கம்' என்று வகைப்படுத்தலாம். இந்த இயக்கங்களின் வரலாறு எழுதப்படும்போது, அவ்வியக்கங்களின் முக்கியமான முகங்களே முதன்மைப் படுத்தப்படுவர். 'தேசிய இயக்கம்' என்றால், காந்தி, நேரு, படேல், போஸ். 'கம்யூனிச இயக்கம்' என்றால் எம்.என்.ராய், அபானி முகர்ஜி, சிங்காரவேலர் போன்றவர்கள், 'தலித் இயக்கம்' என்றால், அம்பேத்கர், கன்ஷி ராம் போன்றவர்கள் என்பதே வழக்கமாக இருந்து வருகிறது.

இப்படியான மைய நீரோட்ட வரலாற்று எழுத்துக்களில் இருந்து, சற்று விலகி புதிய வரலாற்று எழுத்துக்கள் அவ்வப்போது எழுதப்படுவதுண்டு. அவை இந்த இயக்கங்களில் பங்கேற்ற விளிம்புநிலை மக்களின் வாழ்வியலைக் குறித்துப் பேசும். குறிப்பாக பெண்கள், பிறப்படுத்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரைச் சொல்லலாம்.

அப்படி இந்திய தேசிய இயக்கத்தில் பங்கேற்ற முகம் தெரியாத முகங்களைப் பற்றி பேசும் நூல்தான் ஊடகர் பி.சாய்நாத் எழுதி சமீபத்தில் வெளியாகி இருக்கும் "THE LAST HEROES - FOOT SOLDIERS OF INDIAN FREEDOM". ராஜசங்கீதன் மொழிபெயர்ப்பில், பாரதி புத்தகாலயம் இந்நூலை தமிழில் வெளியிட்டுள்ளது.




வெகுமக்கள் இயக்கத்தின் மூலக்கல்லாக இருந்த எளிய மக்களைத்தான், அவ்வியக்கத்தின் இறுதி நாயகர்கள் என்கிறார் சாய்நாத். இந்திய விடுதலைக்காக களத்தில் போராடி சிறைசென்ற சங்கரைய்யா, நல்லகண்ணு உள்ளிட்ட 15 பேரின் வாழ்க்கை இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நூலில் இடம்பெற்ற ஒரு சிலரைத் தவிர, பெரும்பாலான விடுதலை போராட்ட வீரர்கள் மறைவெய்தி விட்டனர். அவர்களில் பலர் தங்களின் வாழ்நாளில் ஒருமுறை கூட விடுதலைப் போராட்ட வீரருக்கான ஓய்வூதியம் வாங்காதவர்கள். காரணம், இந்திய அரசின் விதிமுறைகளின்படி அவர்கள் செய்த போராட்டமெல்லாம் விடுதலைப் போராட்டம் என்ற வரையறைக்குள் அடங்காது என்பதால்.

ஒரு விடுதலைப் போராட்ட வீரருக்கும் அவரது 20 சகாக்களுக்கும் சமைத்துப் போடும் ஒரு பெண் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர் தானே? யார் ஒருவரையும் கொல்லாமல், காட்டில் பதுங்கி இந்திய தேசிய ராணுவத்திற்கு (INA) உளவு வேலை பார்க்கும் ஒருவர் விடுதலைப் போராட்ட வீரர் தானே? உள்நாட்டிலுள்ள சாதி மற்றும் வர்க்கப் பாகுபாடுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியவர்களும் நிலவுடைமை ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடியவர்களும் இந்தியாவின் சமூக விடுதலையைப் பேசிய விடுதலைப் போராட்ட வீரர் தானே? இப்படி இதுவரை பெரிதாகக் கேள்விப்படாத மற்றும் பேசப்படாத பகுதிகள் மீது இந்நூல் கவனம் குவிக்கிறது.

**தேசிய விடுதலை இயக்கத்தை போலவே, அனைத்து வெகுஜன இயக்கங்களுக்கும் இதுபோன்ற விளிம்புநிலையினர்தான் ஆதாரமாக இருந்துள்ளனர்!**

தேசிய விடுதலை இயக்கத்தை போலவே, அனைத்து வெகுஜன இயக்கங்களுக்கும் இதுபோன்ற விளிம்புநிலையினர்தான் ஆதாரமாக இருந்துள்ளனர், அவர்களுடைய வரலாறும் பதிவு செய்ய படவேண்டும் என்பதைத்தான் இந்நூல் அழுத்தமாக சுட்டிக்காட்டுகிறது. இறுதி நாயகர்களை, கதாநாயகர்களாக வர்ணிக்கும் இந்தப் புத்தகம் அவசியம் வாசிக்கப்பட வேண்டிய ஒன்று.

...வாசிப்போம்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

533

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131